## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்தியசாலை சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றுமு் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மருத்துவமனைக் கட்டண கடன் பட்டோர் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 9.95 மில்லியனான செலவு மீதிகளுக்கு மற்றும் வியாபாரக் கடன் பட்டோர் கணக்கில் நிலவிய ரூபா 1.58 மில்லியனான வரவு மீதிகளுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு பதிலாக, அந்த கணக்குகளின் எதிர்க் கணக்குகளுக்கு ஈடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, மருத்துவமனையின் பதவியணிக்காக இலவசமான மருத்துவ சிகிச்சைகளுக்காக | இந்த பணம் எதிர்கால காசு உட்பாய்ச்சல்களில் தீர்வையாவதில்லை என்பதும், நிதிச் செயலாற்றல் பெறுபேற்றுக்கு எதுவித மாற்றமும் இடம்பெறுவதில்லை என்பது மற்றும் அதனால் நிதிச் செயலாற்றல் அறிக்கைகளை பயன்படுத்துவோர் தவறாக வழிகாட்டப்படுதல். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட ரூபா 118.03 மில்லியன் மற்றும் மதகுருமார் மற்றும் ஏனையோருக்கு இலவச மருத்துவ சிகிச்சைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 35.31 மில்லியன் மருத்துவக் கட்டண வருமானத்திலும் ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கிரயம் ரூபா 3,555.50 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்த பயன்படு ஆயட்காலம் நிறைவடைந்திருந்த போதிலும், இந்த சொத்துக்கள் மருத்துவமனையால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், தற்போது வரையிலும் காணிகள், கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமை மற்றும் அதற்கமைய அதற்குரிய கணக்கீட்டு திருத்தங்களை மேற்கொண்டு 2022 ஆம் ஆண்டிள் கணக்குகளை கணக்காய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்சார் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் மீளசெலுத்துதல் ஆகியவற்றினை கணக்கு வைக்கும் திட்டவட்டமான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. கடன் கடிதங்கள் (Credit Letter) அடிப்படையில் மருத்துவமனையிலிருந்து விலகிச் செல்லும் நோயாளிகளின் மருத்துவமனை கட்டணங்கள் மற்றும் தொழில்சார் கட்டணங்களை திட்டவட்டமாக இனங்காணாது 2021 டிசம்பர் 31 ஆம் திகதி மருத்துவமனை கட்டண | 2022 ஆம் ஆண்டு முதல் அனைத்து தொழிற்சார் கட்டணங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படும் என்பது, அதற்கு மேலதிகமாக தொழில்சார் கட்டண மருத்துவமனை மென்பொருள் கட்டமைப்பின் ஊடாக நோயாளியின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமையை 2022 அக்டோபர் மாதம் 25 ஆம் திகதியளவில் மருத்துவமனையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை, | தொழில்சார் கட்டணங்களை அளவிடுதல் மற்றும் மீள செலுத்தல்களை கணக்கு வைத்தல் தொடர்பில் திட்டவட்டமான நடைமுறை ஒன்று இனம் காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானங்கள் கணக்கில் ரூபா 61.51 மில்லியன் செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டண கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணங்களை சரியாக இனங்கண்டதன் பின்னர் மருத்துவமனைன் கட்டணங்கள் கட்டுப்பாட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளமை. | |
| (ஆ) | வைத்தியசாலை சபையினால் 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் மருத்துவ வளங்கள் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துகள் மற்றும் ஏனைய அறுவை சிகிச்சை உபகரணங்களுக்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 698.68 சுகாதார அமைச்சினால் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இருதய சத்திர சிகிச்சைகளுக்காக அமைச்சிலிருந்து பெற்றக்கொள்ள வேண்டிய ரூபா 748.55 மில்லியனுக்கு ஈடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் அமைச்சிலிருந்து தொடர்ந்தும் பெற வேண்டிய ரூபா 49.87 மில்லியனான தொகை கடன்பட்டோர் பட்டோலையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் மற்றும் குறித்த வருடத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இந்த ஈடு செய்தல் இடம்பெற்றுள்ளமை. திறைச்சேரியின் அறிவுரைகளுக்கு அமைய எதிர்காலத்தில் இந்த நோயாளர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதிகளுக்கு தனியான செலவின தலைப்பினை பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சின் ஊடாக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | பொது திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | Systolic கணினி கட்டமைப்பு மற்றும் Accpack கணினி கட்டமைப்பு ஆகியவற்றுக்கிடையே தொடர்பொன்று இல்லாதிருந்த காரணத்தால் இரு கணினி கட்டமைப்புகளுக்கு இடையே நிலவிய பல்வேறு சீராக்கங்களுக்குரியதாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் வியாபார கடன்கொடுத்தோர் ரூபா 115 மில்லியனுக்கு கிட்டிய தொகை பேரேட்டு உறுதிச்சீட்டுகளை தயாரிக்காது பதிவழிக்கப்பட்டிருந்தது. குறித்த சீராக்கங்கள் கடந்த | கடந்த வருடங்களில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள கடன்கொடுத்தோர் மீதிகளில் நிலவிய மறை பெறுமதிகள் மற்றும் கணக்கீட்டு வழுக்களை திருத்தும் போது குறித்த கணக்கிட்டு மென்பொருளில் உள்ள நடைமுறையாவது வரவு/செலவு பதிவுகளின் மூலம் சீராக்கல் என்பது, அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் கடன்கொடுத்தோரில் கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை. | இரு கணினி கட்டமைப்புகளுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்தி சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடத்தின் சீராக்கல் கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்படாது தேறிய மீதி ரூபா 29.32 மில்லியன் திரண்ட வருமான செலவு கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 35.29 மல்லியமான தொகை கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது தனிப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகளுக்கு சீராக்கப்படாது இலாபநட்ட கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்ட பெண் தாதியர்களுக்கான விடுதி கட்டிடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 413.16 மில்லியனான போதிலும் மீளாய்வாண்டில் ஏனைய கட்டிடங்களின் கீழ் ரூபா 477.42 மில்லியன் மூலதனமாக்கப்பட்டிருந்த காரணத்தால் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 64.26 மில்லியன் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடத்தின் கிரயம் நடைமுறை வேலைகள் கணக்கிற்கு ரூபா 486.01 மில்லியன் சீராக்கப்பட்ட காரணத்தால் நடைமுறை வேலை கணக்கின் பெறுமதி ரூபா 72.85 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த தவறுகள் திருத்தப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கடன்கொடுத்தோர், கடன்பட்டோர், செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணங்கள், இடர்கடன் | இதற்குரிய சீராக்கங்களை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளமை. | தவறுகளுக்கு மற்றும் வேறுபாட்டுக்கு காரணங்களை இனங்கண்டு |

| | |
|---|---|
| வட்டி மற்றும் நானாவித கடன்கொடுத்தோர் ஆகிய 05 விடயங்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்கள், பதிவேடுகள் மற்றும் கணினி அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 87.49 மில்லியனான வேறுபாடொன்று நிலவியதுடன் வேறுபாட்டுக்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 491.07 மில்லியனான மருத்துவமனை கட்டணங்கள் கடன்பட்டோர், வியாபார கடன்கொடுத்தோர், சேவை கட்டணங்கள் மற்றும் மீளசெலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் ஆகிய 04 கணக்கு விடயங்கள் தொடர்பில் காலப்பகுப்பாய்வு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது மேய்மையாய்வு செய்வதற்கு அல்லது கணக்காய்வில் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | • பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை தேடிக்கண்டறிந்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.<br>• கடன்கொடுத்தோருக்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் இதுவரையிலும் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் தற்போது நிலவும் கணக்கீட்டு கட்டமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ள கூடிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | • பணிப்பாளர்சபையின் அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>• கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 முதல் 2.6 வரையான பந்தி | பதவியணியின் ஒவ்வொரு ஊழியரினதும் மற்றும் ஒவ்வொரு தரங்களினதும் பதவிகளுக்காக தேவையான தகைமைகள், பதவியின் சம்பள அளவு திட்டம், வயது எல்லை மற்றும் உரிய ஏனைய விபரங்களை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து தாபன விதிக் | மதியுரையாளரால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை தயாரிப்பதற்காக உள்ளகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையில் காண்பிக்கப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள செயல் ஒழுங்கு முறைகளை பின்பற்றி அந்த நடைமுறைக்காக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த ஆண்டறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் நிதியாண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்குகள் 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலதாமதத்துடன் 2022 நவம்பர் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்காக மர்ப்பிக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2006 மே 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கடித இலக்கம் Q2-84/2006 | இரசாயன ஆய்வுகூடத்தின் பதவியணியால் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படும் இரசாயன ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்காக துண்டுக்கூலி அடிப்படையில் படிகளை செலுத்தும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் கோரப்படும் அனைத்து பரிசோதனைகளுக்காகவும், துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் 2021 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் 154,687 பல்வேறு ஆய்வுகூடப் | இதன்போது நோயாளர் பிணியாய்வுகளுக்காக முன்னுரிமை வழங்கி செயற்பட்டுள்ளதாக 2022.08.17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இரசாயன ஆய்வுகூடத்தின் அனைத்து பரிவுகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் மருத்துவ நிபுணர்களின் அங்கீகாரத்துடன் பரிசோதனை பதிவேடொன்றினை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை. | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பொது சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிசோதனைகளுக்காக ரூபா 3.48 மில்லியனான படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதிய DMS/1758-Vol.1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மீள்கட்டமைப்பு முன் மொழிவு தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பதவியணியினர் மீள்கட்டமைப்பிற்காக தேவையான முன்மொழிவு தயாரித்தல் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய PFD 08/2019 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டு முதல் இலத்திரனியல் பெறுகை நடைமுறையொன்றினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்ப பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை, COVID தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமை. | பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க மற்றும் 2020 பெப்ரவரி 21 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து, உரிய தரப்பினரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் தேவையற்ற போதிலும், மருத்துவமனை பதவியணிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராத போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2020 | மருத்துவமனையின் பணிகளை பராமரிக்கும் நோக்கில் மருத்துவமனையினுள் நிலவிய அந்த பதவிகளை நிரப்புதல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் 8 பதவியணித் தொகுதிகளுக்காக தற்காலிக, ஒப்பந்த, அமைய மற்றும் நிரந்தர அடிப்படையில் 237 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 254.19 மில்லியன் நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 173.8 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 427.99 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் செலவினங்கள் ரூபா 157.79 மில்லியனாக அதிகரித்திருந்தமை மற்றும் வருமானம் ரூபா 270.19 மில்லியனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டில் அரச மூலதன நிதியேற்பாட்டின் கீழ் மருத்துவமனையின் நிர்வாகக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 22 ஆம் திகதி ரூபா 154.56 மில்லியனான தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) 2020 டிசம்பர் 30 ஆம் திகதியின் பின்னர் மருத்துவமனையால் அவ்வப்போது சுட்டி காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ததன் பின்னர் கட்டிடத்தின் அனைத்து பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை, 2021 மே 18 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 14 ஆம் திகதி வரையிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மதியுரை நிறுவனத்தினால் மருத்துவமனைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 மார்ச் 18 ஆம் திகதி கட்டிடம் கையேற்கப்பட்டு மருத்துவமனையால் | 2020.07.09 ஆம் திகதி முதல் 2021.01.14 ஆம் திகதி வரையிலுமான ஒப்பந்த நிறைவு காலத்தினை நீடிப்பு செய்வதற்கு மதியுரை நிறுவனமான கட்டிடங்கள் திணைக்களம் உரிய பரிந்துரைகளை 2022.06.15 ஆம் திகதி மருத்துவமனைக்கு வழங்கியுள்ளமை மற்றும் இனங்காணப்பட்ட குறைபாடுகள் ஒப்பந்த கம்பெனியினால் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் 2022 மார்ச் 18 ஆம் திகதி கட்டிடம் | நிர்வாக கட்டிடம் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2023 பெப்ரவரி மாதம் வரையில் நிர்வாகக் கட்டிடம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது. | பொறுப்பேற்கப்பட்டமை. | |
| (ii) | கட்டிடங்கள் திணைக்களத்தினால் சான்றுபடுத்தப்பட்டவாறு இந்த ஒப்பந்தத்தின் செலவினம் ரூபா 168.44 மில்லியனாக காணப்பட்டதுடன் ஒப்பந்தத்தின் விலை தளம்பல் அடைந்து ரூபா 13.88 மில்லியன் அளவானது ஒப்பந்த கிரயத்தில் 8.98 சதவீதமாக கணிப்பிடப்பட்டு கட்டிடத்தின் ஆரம்ப மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள கேட்போர்கூட வளிச்சீராக்கள் கட்டமைப்பினை மேற்கொள்ளாமை, கேட்போர் கூடத்தின் தரைக்கு பளிங்கு கல் பதிக்காமை போன்ற பணிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிர்மாணங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட வளிச்சீராக்கல் கட்டமைப்பு தொடர்பிலான சிக்கல்களுக்கு மதியுரை கம்பெனியான கட்டிடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் குறித்த அமைச்சு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை வழங்கியுள்ளமை மற்றும் இதன் போது அவர்களின் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது வளிச்சீராக்கள் கட்டமைப்பிற்கு மாத்திரம் என்பது. | விலை தளம்பலினை கருத்தில் கொள்ளும் போது நிறைவேற்றப்படாத பணிகள் தொடர்பிலும் கவனத்தில் கொள்ள வேண்டும். |
| (iii) | 2020 ஒக்தோபர் 21 ஆம் திகதிய அமைச்சின் பெறுமைகள் குழு தீர்மானத்திற்கமைய ஒப்பந்த விலை தளம்பலுக்கு 2006 பெறுமைகள் வழிகாட்டி கோவையின் 8.13.4 வழிகாட்டிக்கமைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் உரிய தரப்பினருக்கு அனுப்பப்பட்டு உரிய அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) மருத்துவமனையில் வேலைத் தளம் மற்றும் பூங்கா சுத்திகரிப்பு பதவியணிக்கு அலுவலகம் ஒன்றினை நடாத்திச் செல்வதற்கு இரு மாடி கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்ததாரர் ஒருவருக்கு ரூபா 87.02 மில்லியன் (வற் வரி நீங்கலாக) தொகைக்கு 2016 நவம்பர் 09 ஆம் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு தேவையான மதியுரை சேவையினை பெற்றுக்கொள்ளும் போது பெறுகை நடைமுறையை பின்பற்றாது பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய மத்திய பொறியியல் பணியகம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த பெறுமதியில் 8 சதவீதம் அல்லது ரூபா 6.96 மில்லியன் மதியுரை சேவைகளுக்கு செலுத்துவதற்கு இணங்கி இருந்ததுடன் அந்த பெறுமதியானது அரச பொறியியல் கூட்டத்தாபனத்திற்கு ஒப்பாக ரூபா 3.48 மில்லியனால் மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்பாக ரூபா 2.61 மில்லியனால் கூடிய பெறுமதியினை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இக்கால பகுதியினுள் மருத்துவமனையை நிர்மாணிக்கும் செயற்திட்டங்கள் சில ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை, ஒரு நிறுவனத்திற்கு அந்த அனைத்து செயற்திட்டங்களுக்கும் மதியுரை வழங்கப்பட்டால் உரிய காலத்தினுள் இச்செயற்திட்டத்தினை ஆரம்பிப்பது கடினமானது என்பது மற்றும் அதற்கமைய மருத்துவமனையின் பதவியணி இதனை பின்பற்றியுள்ளமை. | மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்ளும்போது பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | ICTAD நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிர்மாண விலைக்கேள்வி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களுக்கமைய தாமதக் கட்டணமாக மொத்த ஒப்பந்த பெறுமதியில் நாளொன்றுக்கு 0.05 மற்றும் ஆகக் கூடியது 10 சதவீதம் வரையிலும் அறவிடக்கூடிய போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையில் அது 0.05 மற்றும் ஆகக் கூடியது 5 சதவீதமாக உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபாய்.4.35 மில்லியன் தாமத கட்டணம் ஒன்று மருத்துவமனைக்கு இழப்பாகியிருந்தது. | மதியுரை நிறுவனம் விலை கேள்வி ஆவணங்களை தயாரித்துள்ளது ICTAD நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விலை கேள்வி ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு என்பது மற்றும் இதன் போது மதியுரை நிறுவனம் தாமத கட்டணங்களாக 5% அளவினை குறிப்பிட்டுள்ளதுடன் அது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழு அங்கீகரித்து நடைமுறைப்படுத்தியுள்ளமை. | ICTAD நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விலைக்கேள்வி தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கட்டிடத்தினை நிர்மாணித்தல் ஆரம்பத்தில் வேலைத்தளம் நிலவிய கட்டிடத்தினை உடைத்து அகற்றப்பட்ட காரணத்தால் ஒரு மாதத்திற்கு ரூபா 257,000 ஆன தொகைக்கு 12 கொள்கலன்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்கமைய 2018 ஏப்ரல் மாதமளவில் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தால் 2022 செப்டம்பர் | இந்த ஒப்பந்தம் உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மதியுரை நிறுவனத்தினதும் உதவியுடன் மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது மற்றும் அது பெறுகைகள் குழுவினாலும் பின்பற்றப்பட்டுள்ளமை. அதற்கமைய ஒப்பந்ததாரரின் நிதி நிலைமை தொடர்பில் | ஒப்பந்ததாரரை தெரிவு செய்யும்போது நிதி இயலுமை தொடர்பில் பரிசோதனைக்கு உள்ளாக்க வேண்டியதுடன் உடன்படிக்கை ஒப்பந்தங்களுக்கமைய துரிதமாக கட்டிடத்தின் பணிகள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 ஆம் திகதியில் 52 மாதங்களுக்காக ரூபா 13.36 மில்லியனான மேலதிக வாடகை செலவினம் ஒன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. ஒப்பந்ததாரரின் நிதி இயலுமையை பரிசோதிக்காது ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்திற்கொள்ளப்பட்டு பரிந்துரை வழங்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்பது மற்றும் இதுவரையிலும் பூர்த்தி மட்டத்தில் காணப்படுகின்றமையால் எஞ்சிய சில வாரங்களினுள் சில கொள்கலன்களை விடுவிக்கும் இயலுமை காணப்படுகின்றமை. | |
| (இ) | மருத்துவமனையின் வளங்கள் ஈடுபடுத்தப்பட்டு கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட சிகிச்சைகள் தொடர்பில் மருத்துவ நிபுணர்களின் விரும்பிற்கமைய நோயாளிகளிடமிருந்து தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக தொழில்சார் கட்டணங்களாக ரூபா 1,000 முதல் ரூபா 120,000 வரையிலான வீச்சில் பணம் அறவிடப்பட்டிருந்தது. | தற்போது அறிமுகப்படுத்தப்படும் பொதி முறைமையின் மூலம் இந்த நிலைமை சரியாகக்கூடும் என்பது. | கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட அளவீட்டு முறைமை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ii) | 1984 ஜுலை 18 ஆம் திகதிய அமப/1984/335(2) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2000 நவம்பர் 15 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் பொதுவான கடமை நேரத்தினுள் செலுத்தும் வாட்டுக்களில் நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகளுக்காக தொழில்சார் கட்டணங்களை அறவிட முடியாத போதிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனைக்கு அமைய 2021 ஆம் ஆண்டில் 14 சந்தர்ப்பங்களில் பொதுவான கடமை நேரத்தினுள் | இந்த கணக்காய்வு பரிசோதனைக்காக கணக்காய்வு பிரிவிற்கு செலுத்தும் வாட்டுக்களின் இருதய சத்திர சிகிச்சை குறிப்புகள் அடங்கிய புத்தகம் மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளமை, இந்த 5 அறுவை சிகிச்சைகளும் நாட்டில் முன்னர் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட சிரமமான காலத்திலேயே என்பது, இவ்வாறான நிலைமையின் கீழ் இருதய சத்திர சிகிச்சை கூடத்தின் கடமைகளை | அமைச்சரவையின் தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த அறுவை சிகிச்சைகளுக்காக ரூபா 2.33 மில்லியன் தொழிற்சார் கட்டணங்களாக அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் இருதய சத்திர சிகிச்சை கூடத்தில் (CTOT) ஆய்வுக்கூட பரிசோதனையில் மருத்துவமனை பணிப்பாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொதுவான கடமை நேரத்தினுள் அறுவை சிகிச்சை கூடம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பதிவேட்டில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நேரமும் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | இரத்து செய்யாது இருதய நோயாளர்களின் நோய் பிணியாய்வுகளை தடை ஏற்படாத வகையில் இந்த அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டமை. | |
| (iii) | மருத்துவ நிபுணர்கள் தமது கடமை நேரத்தின் பின்னர் மேற்கொள்ளும் சத்திர சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்கு வைத்தியசாலை சபையினால் மாதாந்தம் ரூபா 581,418 அளவான பொது மேய்ந்தழைச் செலவினம் செலவிடப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டினுள் பதவியணிக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்த தொழில்சார் கட்டணங்கள் ரூபா 388 மில்லியனில் சபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த மொத்த சேவைக் கட்டணமானது ரூபா 583,035 மாத்திரமாகும். சேவை கட்டணத்தை அதிகரித்தல் தொடர்பில் 2019 செப்டம்பர் 25 ஆம் திகதி முதல் பணிப்பாளர் சபைக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்த போதிலும் உள்ளபடியாக செலவிடப்பட்ட பொது மேய்ந்தலை கிரயத்திற்கு ஒப்பாக அறவிடும் சேவை கட்டணங்களை அதிகரிப்பதற்கு இதுவரையிலும் தவறியுள்ளது. அதற்கமைய 1999 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள தொழில்சார் கட்டணத்தில் 0.15 சதவீதமான சேவை கட்டணம் மாத்திரம் அறவிடும் முறைமை மீளாய்வாண்டு வரையிலும் | இந்த வாட்டுக்களில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக 30 சதவீத இலாப விகிதம் ஒன்றினை வைத்து மருத்துவமனையினால் கட்டணங்கள் அறவிடப்படுகின்றமை, மருத்துவமனை கட்டணங்கள், மருந்து மற்றும் நுகர்வு பொருட்கள், அறுவை சிகிச்சை கட்டணங்கள், பரிசோதனை கட்டணங்கள் போன்றவற்றிற்காக மருத்துவமனைக்கு உயர்வான வருமானம் ஒன்று கிடைக்கின்றமை, அதற்கு மேலதிகமாக தொழில்சார் கட்டணங்களில் 0.15 சதவீதமான கட்டணமொன்றும் மருத்துவமனைக்கு அறவிடப்படுகின்றமை, தனியார் துறை மருத்துவமனைகளில் இவ்வாறான கட்டணம் ஒன்று அறவிடப்படுவதில்லை என்பது. | மருத்துவமனையின் அறுவை சிகிச்சை கூடத்தினை பயன்படுத்தல் மற்றும் ஏனைய பொது மேய்ந்தலை (பட்டியல்களில் உள்ளடங்காத) செலவினங்கள் மற்றும் தொழில்சார் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் செலுத்தும் போது மருத்துவமனைக்கு ஏற்க நேரிடும் ஏனைய அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கும் வகையில் நடைமுறையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேணி செல்லப்பட்டிருந்த போதிலும் உரிய காலங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு மருத்துவமனையின் நிர்வாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (iv) | அமைச்சரவை அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் உதவி மருத்துவர் மற்றும் ஏனைய பதவியணிக்காக 2021 ஆம் ஆண்டில் தொழில்சார் கட்டணங்கள் ரூபா 76.91 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை. | அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும் |
| (v) | மருத்துவமனை பதவியணிகு உரித்தற்ற 04 வெளிவாரி மருத்துவர்களினால் 2021 ஆம் ஆண்டினுள் மருத்துவமனை வளங்களை பயன்படுத்தி அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த மருத்துவர்களால் 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 6.59 மில்லியனான தொழில்சார் கட்டணங்கள் நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தன. அந்த தொகையில் மருத்துவமனைக்கு 0.15 சதவீதமான சேவை கட்டணம் ஒன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மூன்று மருத்துவர்களுக்கு தனது தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிராததுடன் மருத்துவர்கள் மருத்துவமனையினுள் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கும் தொழில்சார் கட்டணங்களை அறவிடுவதற்கும் உரிய அங்கீகாரங்கள் கணக்காய்விக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த மருத்துவர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராமையினால் நோயாளர்களின் பொறுப்பானது மருத்துவமனைக்கு சாட்டப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இரு மருத்துவர்களுக்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையினால் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை, ஏனைய மருத்துவர்கள் தொடர்பிலும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து உரிய பணிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வெளிவாரி மருத்துவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் பொறுப்பு தொடர்பில் உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஏனைய உதவி பதவியணிக்கு மீள செலுத்தப்பட்டிருந்த தொழில்சார் கட்டணங்களின் அடிப்படையில் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிராததுடன் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு அவ்வாறே கழிக்கபபட்டிராத மொத்த உழைக்கும் போது செலுத்தும் வரியானது ரூபா 108.52 மில்லியன் ஆகும். | இது தொடர்பில் வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுவில் மேன்முறையீடொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளதுடன் அதன் போது வழங்கப்படும் தீர்மானத்திற்கு அமைய மேலதிக பணிகள் முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளமை. | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்மானம் கிடைத்த பின்னர் அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவமனையின் கணினி கட்டமைப்பு (Systolic –Accpack) தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | வைத்தியசாலை சபையில் காணப்படும் Systolic கணினி கட்டமைப்பில் Hospital Computer Module, Inventory Computer Module ஆகிய இரு கணினி கட்டமைப்புகளின் தகவல்கள் Data Export செய்தமையால் Accpack கணினி கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்பட்ட (Upload) செய்யப்பட்டுள்ளதுடன் Hospital Computer Module இன் தகவல்கள் Inventory Computer Module கணினி கட்டமைப்பிற்கு உள்ளடக்கிய பின்னர் ஏற்படும் மாற்றங்கள் மீண்டும் Accpack கட்டமைப்பினுள் (Update) நாளதுவரையாக்கப்படாத சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. இதனால் மருத்துவமனை கட்டணங்களை மீளசெலுத்துதல் (Refund), இரத்து செய்யப்படும் பொருட்பெறுவனவு அட்டைகள் | மருத்துவமனையின் Systolic சுகாதார தகவல் கட்டமைப்பு (HIS) இலிருந்து Sage Accpac கணக்கீட்டு கட்டமைப்பு வரையிலும் தகவல்களை ஊடு கடத்தும் நடைமுறை தன்னியக்கமாக ஆரம்பிப்பதற்கு, 2022 ஏப்ரல் 5 ஆம் திகதி ரூபா 140,000 தொகைக்கு Systolic சுகாதார தகவல் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யும் குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளமை, கணினி கட்டமைப்புகளில் காணப்படும் தகவல்களை நாளதுவரையாக்கல் Accpack கணினி கட்டமைப்பில் உள்ளடக்கப்படாமை மற்றும் கணினி கட்டமைப்பின் தரவுகளை உள்ளடக்குதல், பரீட்சித்தல், அங்கீகரிப்பதற்கு உரிய | கணினி கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(GRN) மற்றும் இரத்து செய்யப்படும் மருத்துவமனை கட்டண பட்டியல்கள் ஆகியவற்றிற்காக வழங்கப்படும் புதிய பொருள் பெறுவனவு அட்டை அல்லது புதிய மருத்துவமனை கட்டண பட்டியல்களை உள்ளடக்கும் போது தகவல்கள் பல தடவைகள் Accpack கணினி கட்டமைப்பில் காணப்படுகின்ற கொள்வனவு கிரயத்தில் உள்ளடக்கப்படும் அபாயமொன்று நிலவுகின்றது. Accpack கணினிக் கட்டமைப்பினுள் நிலவும் கொள்வனவுக் கிரயம் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 4.75 மில்லியனாலும் கடன்பட்டோர் மற்றும் மருத்துவமனை கட்டண வருமானம் ரூபா 1.84 மில்லியனாலும் அதிகரித்து காண்பிக்கப்பட்டுள்ளமை தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

மருத்துவமனையில் காணப்படும் கணினி கட்டமைப்புகளுக்கு இடையே இடைத்தொடர்பொன்று (System link) ஏற்படுத்தப்பட்டிராத காரணத்தால் இந்த கணினி கட்டமைப்புகளில் காணப்படும் அனைத்து தகவல்களையும் நாளதுவரையாக்கல் Accpack கணினி கட்டமைப்பில் உள்ளடக்கப்படாமை மற்றும் கணினி கட்டமைப்பில் தரவுகளை உள்ளடக்குதல், பரிசோதித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்கு உரிய நடைமுறைகள் உரிய அதிகாரங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படாமையும் அந்த நடைமுறை தொடர்பில் உள்ளக கட்டுப்பாடுகள் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்படுகின்ற காரணத்தால் தவறுகள் மற்றும் மோசடிகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படக்கூடும் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

நடைமுறைகள் தொடர்பில் உதவி கணக்காளருக்கு அதிகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | Ward Register இன் உரிய திகதியில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் தொடர்பில் (Current) பரிசோதனையில் அத்திகதியில் உள்ளபடியான மருத்துவமனையில் இருந்து வெளியேறிச் சென்றுள்ள எனினும் பட்டியல்களை தீர்ப்பனவு செய்திராத 14 நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளாக கணினி கட்டமைப்பில் காண்பிக்கப்பட்டமையால் அந்த 12 நோயாளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து கணக்காய்வு திகதி வரையிலும் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டவாறு காணப்பட்டதுடன் ஏனைய இரு நோயாளிகளுக்கும் 329 நாட்கள் மற்றும் 5 நாட்களுக்கு ரூபா 23.98 மில்லியன் பெறுமதியான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த கட்டில் அட்டை அறிக்கைகளுக்கு உரிய நோயாளிகள் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளியாக கணினி கட்டமைப்பில் காண்பிப்பதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை, அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த சம்பவங்களுக்கான காரணமாக அமைந்த விடயங்களை கோரி ஆராய்வதற்கு நடவடிக்கை எடுத்து நிதி ரீதியான நட்டம் ஒன்று ஏற்பட்டிருப்பின் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | மருத்துவமனையின் கணிணி கட்டமைப்பில் (Systolic – Hospital) Ward Register இன் Bill Finalized எனும் உருப்படியை பரிசோதித்த போது 5 பின்நோயாளர் வாட்டுக்களுக்கு உரிய நோயாளர்களின் இறுதி பட்டியல்களை தயாரித்து அந்த நோயாளர்கள் மருத்துவமனையில் இருந்து வெளியேறி இருந்த போதிலும் கணிணி கட்டமைப்பில் தொடர்ந்தும் நோயாளிகளாக காண்பிக்கப்பட்ட 16 நோயாளர்கள் உள்ளமை | குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை, அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த சம்பவங்களுக்கு காரணமாக அமைந்த விடயங்களை வினவுவதற்கு நடவடிக்கை எடுத்து நிதி ரீதியான நட்டம் ஒன்று ஏற்பட்டிருப்பின் உரிய உத்தியோகத்தர்களிடமிரு | அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. அவற்றுள் 5 நோயாளர்களுக்கு செலுத்த வேண்டிய பட்டியல்களின் ஒரு பகுதி தீர்க்கப்பட்டு மருத்துவமனையில் இருந்து வெளியேறி சென்றிருந்ததுடன் பெறவேண்டிய பணம் ரூபா 67,195 கணினி கட்டமைப்பில் பெறவேண்டிய பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும் நோயாளர்களால் முழுமையான பட்டியல்களை தீர்த்து மருத்துவமனையில் இருந்து வெளியேறி செல்வதற்கு அனுமதி அளித்தல் கணக்காய்வில் சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது. | ந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (iv) | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான தரவுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கைகளை மாற்றுவதற்கு உள்ள வசதிகளை உருவாக்கியிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை. | மருத்துவமனைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்த பின்னர் அது Systolic கட்டமைப்பினுள் எது வித மாற்றங்களுக்கும் உள்ளாக்க முடியாதவாறு அந்த சந்தர்ப்பத்திலேயே உருவாக்கி வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | அவதானிக்கப்பட்டுள்ள கணினி கணக்கீட்டு கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட இரசாயன ஆய்வுகூட பரிசோதனைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | நிறுவனத்தினால் Hematology மற்றும் Bio Chemistry பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள இரவு நேர இரசாயன ஆய்வுகூட பரிசோதனைகள் தொடர்பில் பேணிச் செல்லப்படும் பதிவேட்டின் பிரகாரம் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அளவு மற்றும் கணினி கட்டமைப்பில் நிலவும் இரவு நேரத்தில் மாதிரிகளை பெற்றுக் கொண்ட அறிக்கையில் (Sample acceptance Report) குறிப்பிடப்பட்டுள்ள பரிசோதனைகளின் அளவு ஆகியவற்றினை ஒப்பிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை. 2021 | இரவு நேரத்தில் மேற்கொள்ளப்படும் Haematology மற்றும் Biochemistry பிரிவுகளில் தனித்தனியாக பராமரிக்கப்படும் இரவு பதிவேடுகளில் உண்மையாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கு உரிய அறிக்கைகள் என்பது, இரவு நேரத்திலும் பகல் நேரத்திலும் இடம்பெற்ற பரிசோதனைகள் மற்றும் கணினி மயப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் தகவல்கள் | கட்டமைப்பு மற்றும் பதிவேடுகளுக்கு இடையிலான வேறுபாடுகள் தொடர்பில் ஒப்பீடு ஒன்று இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு உரியதாக இரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பரிசோதனைகள் தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் Hematology பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையை விட கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 15,556 இனால் குறைவடைந்திருந்ததுடன் Biochemistry பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையை விட கணினி மயப்படுத்தப்பட்டிருந்த பரிசோதனைகளின் எண்ணிக்கையானது 40,059 இனால் அதிகரித்திருந்தமை அவதானிக்ப்பட்டது. அவ்வாறு மாற்றங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களை கண்டறிந்து திருத்துவதற்கு உரிய பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆகியவற்றுக்கு இடையே இதற்கு முன்னரும் வேறுபாடுகள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளமை, அது எல்லா நேரத்திலும் ஒரே பெறுமதியாக இல்லாதிருந்தமை தொடர்பில் பல்வேறு நடைமுறை விடயங்கள் தாக்கமளித்துள்ளமை. | |
| (ii) | Hematology மற்றும் Biochemistry பிரிவுகளால் 2021 ஆம் ஆண்டில் இரவு மற்றும் பகல் நேரங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்காக கணினி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த மாதிரிகளின் அளவு (Sample acceptance Report) 505,064 கூட்டுத்தொகை ஆகும். அதற்கமைய பகல் நேரத்தில் Hematology பரிசோதனை கூடத்திற்கு இரசாயன ஆய்வுக்கூட தொழில்நுட்ப வல்லுநர்கள் 7 பேர் மற்றும் Biochemistry பரிசோதனை கூடத்திற்கு 8 இரசாயன ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் | பகல் நேர சேவைகளில் விசேட பரிசோதனைகள் பல மேற்கொள்ளப்படுகின்றமை , இரவு கடமைகளில் மேற்கொள்ளப்படாத பரிசோதனைகள் பகல் நேரங்களில் மேற்கொள்ள நேர்கின்றமை மற்றும் இரவு நேர சேவை முறை மற்றும் பகல் நேர சேவை முறை எண்ணிக்கை ரீதியில் ஒப்பிட முடியாமை. | இரவு நேரத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற மையால் மற்றும் அசாதாரணமான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்படுகின்ற மையால் இது தொடர்பில் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரவு நேர சேவைகளுக்கு ஒரு பிரிவிற்கு ஒரு இரசாயன ஆய்வுகூட தொழில்நுட்ப வல்லுநர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இந்த இரு பிரிவுகளினதும் 15 இரசாயன ஆய்வு கூட தொழில்நுட்ப வல்லுநர்களால் 2021 ஆம் ஆண்டில் பகல் நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனைகளின் எண்ணிக்கையானது 239,819 ஆகக் காணப்பட்டதுடன் இரசாயன ஆய்வு கூட தொழில்நுட்ப வல்லுநர்கள் இருவரினால் இரவு நேரத்தில் 265,245 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது. அதற்கமைய ஒவ்வொரு பிரிவினாலும் பகல் நேரத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கையை விட இரவு நேரத்தில் ஒரு உத்தியோகத்தரால் அதிகளவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | வைத்தியசாலை சபை அமைந்துள்ள வளாகத்தின் பிரதான திட்டம் (Master Plan) தயாரிப்பதற்கு மதியுரை கட்டணமாக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு ரூபா 508,950 தொகை 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அப்பணியை நிறைவு செய்திருக்கவில்லை. | CECB நிறுவனத்தினால் பொறியியல் அளவீட்டு திட்ட வரைபுகள் இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டுள்ளமை அந்த நடவடிக்கைகள் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் பிற்போடப்பட்டுள்ளமை மற்றும் COPE குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் Cooperate plan தயாரித்த பின்னர் அதன் மேலதிக நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்பது. | இது விலைவற்ற செலவினமாக மாறினால் செலுத்தப்பட்ட ரூபா 508,950 தொகையினை செலுத்துதல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியமை. |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவமனையின் பதவியணிக்குரிய ஆட்சேர்ப்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை சபையின் | மதியுரையாளர்களை தெரிவு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறை (SOR) தயாரிப்பதற்கு பொருத்தமான மதியுரையாளர் ஒருவரின் சேவையினை பெற்றுக்கொள்ளும் போது மதியுரையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தும் வழிகாட்டி கோவையின் 3.4, 3.5. 4.2 மற்றும் 6.6.4 வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.<br>தெரிவு செய்யப்பட்ட மதியுரையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபு அறிக்கைக்காக மருத்துவமனையின் பதவியணி மற்றும் தொழில்சார் சங்கங்களின் இணக்கப்பாடு இல்லாதிருந்த காரணத்தால் 2023 ஆம் ஆண்டு வரையிலும் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு முகாமைத்துவ சபைக்கு முடியாதிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உரிய மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.<br>பெறுகை நிறுவனம் தாபிக்கப்படாது பணிப்பாளர் சபையின் சட்டத்தில் தமக்கு கிடைத்துள்ள மேற்படி அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் பெறுகைகள் வழிகாட்டி கோவைக்கு இணங்க மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளமை. | மற்றும் சேவையில் ஈடுபடுத்தும் மதியுரை கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 செப்டம்பர் 16 ஆம் திகதி ரூபா 2.08 மில்லியன் செலவிடப்பட்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையினால் ABP Monitoring System ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த பெறுகைக்கு விலைக்கேள்வி சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளர் மருத்துவ உபகரணங்களையும் வழங்குவதற்கு உரிய தேசிய ஔடதங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகார சபையில் பதிவினை முன்வைத்திருக்கவில்லை.<br>தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைக்கமைய மேற்படி பதிவின் பின்னர் பெற்றுக் கொள்ளும் பதிவினை பின்னர் பெற்றுக்கொள்ளும் நிபந்தனைக்கு இணங்க ஆகக்கூடிய கூறுவிலைக்கு 2021 மே 20 ஆம் திகதி பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது.<br>எனினும் ஔடதங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகை வழிகாட்டி கோவையின் 2.1 மற்றும் 2.2 வழிகாட்டிகளின் பிரகாரம் அந்த | இதற்கு ISO சான்றிதழ் ஒன்று உள்ளமை மற்றும் அதன் அடிப்படையில் கொள்வனவு இடம்பெற்றுள்ளமை. | பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு 2022 மார்ச் 15 ஆம் திகதியான கணக்காய்வு திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மருத்துவமனையின் Harmonic Hand Piece 08 கொள்வனவு செய்வதற்கு உரிய வழங்குநர் ஒரு உபகரணம் ரூபா 933,900 படி 8 உபகரணங்களுக்கு ரூபா 7.47 மில்லியனான விலைக்கேள்வியை சமர்ப்பித்திருந்தார். 2020 நவம்பர் 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் இந்த உபகரணத்தின் 02 அலகுகள் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கும் 2019 ஆம் ஆண்டின் கூறு விலைகளை கருத்தில் கொண்டு இந்த உபகரணம் ரூபா 868,900 இற்கு கொள்வனவு செய்வதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகைகள் குழு அந்த பரிந்துரையை கருத்தில் கொள்ளாது செயற்பட்டிருந்தது. விலைக் கேள்வியை சமர்ப்பிக்கும் போது 3 முதல் 5 நாட்களுக்கு இடைப்பட்ட வழங்கக்கூடிய விலைக் கெள்வியாளர் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் விலைக்கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் இந்த கேள்வியானது 08 வாரங்கள் முதல் 10 வாரங்களுக்கு இடைப்பட்ட காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் குறித்த உபகரணங்களிடையே 03 உபகரணங்கள் மாத்திரம் உரிய காலப்பகுதியில் கிடைத்திருந்தது. எஞ்சிய 03 உபகரணங்கள் 05 முதல் 54 வாரங்களுக்கிடையே தாம் விலை கேள்வி நிபந்தனை 26.1 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 280,170 ஆன தாமத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விலைக்கேள்வி நிபந்தனை 14.5 இன் பிரகாரம் விலைக்கேள்வி முழுமைப்படுத்தப்படும் வகையிலும் விலைக்கேள்வியில் | வருடாந்தம் தேவையான அளவின் அடிப்படையில் விலைக்கேள்வி கோரப்பட்ட தொழில்நுட்ப குழுவின் பரிந்துரை வழங்கியுள்ள 2 உபகரணங்களுக்கு அலகொன்றின் விலை வழங்குநரின் விலைக்கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை அல்ல என்பது கண்டறியப்பட்டுள்ளமை, எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய விலைக்கேள்வியின் பரிந்துரையாக கருதி பெறுகைகள் குழு இந்த பெறுகையினை அங்கீகரித்துள்ளமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இதற்கு முன்னர் வழங்கிய பரிந்துரை ஒன்றினை மீள வழங்கியுள்ளமை அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தவறொன்று என்பது, இந்த காலத்தில் இலங்கையில் முகம் கொடுத்த பொருளாதார வீழ்ச்சியின் அடிப்படையில் அந்த அலகினை குறித்த விலைக்கு வழங்க முடியாது உள்ளமை மற்றும் அது தொடர்பில் அறிவித்திருந்ததுடன் இது நாட்டில் ஏற்பட்ட நிலைமையின் அடிப்படையில் ஏற்பட்ட நிகழ்வு என்பது. | விலைக்கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்த கூறுவிலைகளை மாற்றம் செய்ய முடியாத போதிலும் அந்த நிபந்தனைக்கு முரணாக இந்த விலைக்கேள்வியில் ஒரு மருத்துவ உபகரணம் விலைக்கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை விட ரூபா 644,391 இற்கு கூடுதலான விலைக்கு அதாவது ரூபா 1.58 மில்லியன் விலையில் விலைக்கேள்வி நிறைவு செய்யப்பட வேண்டிய காலத்தினை விட 81 வாரங்கள் கடந்து சென்ற பின்னர் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் விலைக்கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக்கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2007 மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்கான வழிகாட்டி கோவையில் 5.2.1 வழிகாட்டியின் பிரகாரம் அவசர பெறுகை சந்தர்ப்பம் ஒன்று நீங்கலாக ஏனைய பெறுகை சந்தர்ப்பங்களில் குறித்த தொழில்நுட்பக் குழுவிற்கு சுகாதார அமைச்சின் பிரதிநிதி ஒருவர் (பணிப்பாளர் தர நிலைக்கு குறைவற்ற) அரச மருந்து பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி ஒருவர் (பணிப்பாளர் தரநிலைக்கு குறைவற்ற) ஆகக் குறைந்தது துறையில் விசேட மருத்துவ நிபுணர்கள் இருவர் மற்றும் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் எனுமாறு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனைக்கமைய 05 சந்தர்ப்பங்களில் ரூபா 50.82 மில்லியன் கூட்டுத் தொகையான மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகையில் பரிந்துரைக்கப்பட்டு பிரதிநிதிகளை தொழில்நுட்ப குழுவிற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான கொள்வனவுகள் ரூபா 25 மில்லியனுக்கு குறைவான கொள்வனவுகள் என்பதால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினை நியமிக்கும் போது பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.8.5 இன் பிரகாரம் இதுவரையிலும் செயற்படாதுள்ளமை மற்றும் மேலதிக பெறுகைகளுக்கு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகைகள்) ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்கான வழிகாட்டி கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 06 ஆம் திகதி பதவி வறிதாக்கப்பட்ட பௌதீக இயன்முறையாளர் ஒருவர் 2018 ஏப்ரல் 11 ஆம் திகதி மருத்துவமனைக்கு எதிராக ஹோமாகம தொழில் நியாய சபையில் வழக்கொன்றினை தொடுத்திருந்ததுடன் அந்த உத்தியோகத்தர் மருத்துவமனையினால் அனுமதியின்றி சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளதாக தொழில் நியாய சபையில் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய அனுமதியின்றி சேவையை நிறைவு செய்திருந்திருந்த 4 வருட காலப்பகுதிக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2.77 மில்லியனை செலுத்துவதற்கும் உத்தியோகத்தரை மேலும் சேவையில் தாபிப்பதற்கும் மருத்துவமனைக்கு நேர்ந்திருந்ததுடன் வழக்கறிஞர் கட்டணத்திற்காக ரூபா 64,000 உள்ளடங்களாக ரூபா 2.84 மில்லியன் விளைவற்ற செலவினம் ஒன்றாக மேற்கொள்ள மருத்துவமனைக்கு நேர்ந்திருந்தது. | முன்னால் மருத்துவமனை முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தொழில் நியாய சபையினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை. | பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டும். |